திராவிடநாடு

22—5—60 | வார வெளியீடு | விலை 16 காசு

சொல்லு நிலவே....!

[பொன்னிவளவன்]

அள்ளிக் கொடுத்தவரி
டில்லிக்குச் செல்லுவதை
உள்ளபடி மெல்லமெல்ல
சொல்லு நிலவே!—முழு
உண்மை உணர்த்த இனிச்
சொல்லு நிலவே!

தென்னகத்து வாழ்வுமிகப்
பின்னடையச் செய்துவரும்
சின்னமதி யோர்செயலை
சொல்லு நிலவே!—நாங்கள்
என்னகதி யாவதென்று
சொல்லு நிலவே!

தேனமுதச் செந்தமிழ்க்கு
ஊனமாழி இந்திதுயர்
தானளித்தல் நல்லதுவா?
சொல்லு நிலவே!—நாங்கள்
மானமற்றுப் போவதுமோ?
சொல்லு நிலவே!

எங்கிலுமே நல்புகழ்
தங்கும்வகை செந்தமிழர்
பொங்கிஎழ வேண்டுமெனச்
சொல்லு நிலவே!—'நாங்கள்
சிங்கங்கள்' மாற்றவர்க்குச்
சொல்லு நிலவே!

மானமறவன் சேரன் செங்குட்டுவன்

—(கரந்தை—கணேசன்)—

சென்ற இதழ் தொடர்ச்சி...

காட்சி 6

இடம்:- கங்கைக்கரை (துறை)

இருப்போர்:- செங்குட்டுவன், நற்சோணை, வில்லவன், ஆரிய மன்னர்கள், வீரர்கள், தூதுவன்.

[ஆரிய மன்னர்கள் ஆவேசமாக வருகின்றனர். செங்குட்டுவன் தாயுடன் நீராடிக்கொண்டிருக்கின்றான்]

வில்:- (வரும் ஆரிய மன்னர்களைத் தடுத்து நிறுத்தி) யார் நீங்கள்?

ஆரி. மன்:- நீங்கள் யார்?

ஒரு மன்:- நாங்கள் வடவாரிய மன்னர்கள்...

வில்:- நாங்கள் தென்னவர்கள். தீரமிகு மூவேந்தர் குடியிலே வீரமிகு சேரர் பரம்பரையினர்.

மன். மற்றொருவன்:- ஓ... அதான் இவ்வளவு ஆணவமோ...

வில்:- என்ன... ஆணவமா...?

ஒரு மன்:- ஆம்...... இல்லாவிட்டால்... எம்போலும் ஆரிய மன்னர்களுக்கென்றே அமைந்த இந்த நீர்த்துறையில் அத்துமீறி சூத்திர மன்னன் நீராடுவானா...?

வில்:- ஆ... என்ன சொன்னாய்...?

ஒரு மன்:- தமிழர்கள் சூத்திரர்கள் ...அவர்களின் மன்னன் சற்சூத்திரன்... வேத விதியப்பா அப்படி...

வில்:- வேதம், விதி, சாத்திரம், சம்பிரதாயம் இதெல்லாம் வேறு யாரிடமாவது வைத்துக்கொள்ளுங்கள். இந்த வில்லவனிடம் செல்லாது...

[அதற்குள் நீராடிக்கொண்டிருந்த செங்குட்டுவன் ஆரவாரம் கேட்டு ஈர உடையோடு விரைந்து வருகிறான்.]

செங்:- என்ன வில்லவா......? என்ன...? இவர்கள் எல்லாம் யார்? என்ன சொல்கிறார்கள்?

வில்:- இளவரசே இவர்கள் யாவரும் ஆரிய மன்னர்களாம். நாம் இந்தத் துறையிலே நீராடக் கூடாதாம்!

செங்:- காரணம்...?

வில்:- ஆரிய அரசர்கட்கென்றே அமைக்கப்பட்டதாம் இந்த நீர்த் துறை.

செங்:- நாமும் மன்னர்கள்தானே?

வில்:- நாமும் மன்னர்கள்தான்... ஆனால்... நாம் சூத்திர மன்னர்களாம்... அவர்கள்ஆரிய மன்னர்களாம். அதனாலே நாம் குலத்திலே தாழ்ந்தவர்களாம். இவர்களோ கோபுரத்தின் உச்சியிலே உள்ள குரங்குகள்போலிருக்கிறது. கோத்திரம் பேசுகிறார்கள்... கோத்திரம்...

செங்:- இதெல்லாம் எப்படி...?

வில்:- அதுவா...இளவரசே,அவர்கள் சாத்திரத்திலே அப்படி இருக்கிறதாம்.

செங்:- ஓகோ... இப்பொழுது அதற்கு நாமென்ன செய்ய வேண்டுமாம்?

மன். ஒருவன்:- உடனே நீர்த்துறையிலிருந்து வெளியேறவேண்டும்- துறை தீட்டுப்பட்டுவிட்டதால் அதற்காக ஓராயிரம் பொன் தண்டம் செலுத்தவேண்டும். நடந்தவற்றிற்கு மன்னிப்புக் கேட்கவேண்டும்.

செங்:- மன்னிப்பு... ஆகா... நல்ல ஆணை... தமிழ் மன்னன் ஒருவன் ஆரிய மன்னர்களிடம்... மன்னிப்பு... வரலாறு காணாத புதுமை. வையகம் இதுவரை கேட்டறியாத கொடுமை. மன்னிப்பா...... அதுவும் நானா....., ஆகா... ஆகா... கேட்காவிட்டால்...?

ஆரி. மன்:- போர்...!!

செங்:- போர்... போர்... ஆகா... போர்... ஆகா... இதுசரி...... ஆரியப் பேடிகளே உங்கட்குப் போரிடக்கூடத் தெரியுமா? எங்கே பார்ப்போம் எடுங்கள் வாளை...

[வில்லவன் வாளை உருவுகிறான்.]

ஆரி. ஒரு மன்:- (மெல்ல மற்றொருவனிடம்) என்னப்பா இது நம்ம கூட்டத்தைக் கண்டு பயந்திடுவான்னு நினைச்சுப் போருக்கு வா வென்னுட்டோம்-போருக்கே புறப்பட்டுவிட்டானே புலிபோல,

மன். மற்றொருவன்:- நம்ப ஓடிவிடலாமா...

வேறு ஒருவன்:- இவ்வளவு பேரையுமா ஜெயிச்சுப்பிடுவான் அவன்.

மற்றொருவன்:- அதானே பாத்தேன்...

செங்:- (ஆரிய மன்னர் கூட்டத்தைப் பார்த்து) ஊம்...... ஏன் திகைக்கிறீர்கள்... உம்... எடுங்கள் வாளை...

[போர் நடைபெறுகிறது. போரில் ஆரிய மன்னர் கூட்டத்தினர் சிதைந்து

(4-ம் பக்கம் பார்க்க)

காமன்வெல்த் கேலிக்கூத்து

லர் 18] ஆண்டுச் சந்தா ரூ. 8. (22—5—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 45

தென் ஆப்பிரிக்க இன ஒதுக்கல் வெறித்தன்மை தான் தற்போதைய பிரச்சினை. மனித இனம் முழுவதும் ஒருங்கே இலண்டனை நோக்கி ஒரு தீர்மானித்த, நீடித்த முடிவுக்காகக் காத்திருந்தது. ஆனால் காமன்வெல்த் என்ற அமைப்பால் தனிப்பட்ட வகையில் அணுவளவு பயனும் ஏற்படவில்லை. தற்போது இலண்டனில் நடந்த 11-நாடுகளின் பிரதமர்களின் கூட்டம் ஒன்றுதான் தென் ஆப்பிரிக்க விவகாரத்துக்கு முடிவு கட்டக்கூடிய ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று காமன்வெல்த் அமைப்பின்பால் உலகம் வைத்திருந்த நம்பிக்கை, அவநம்பிக்கையாக வந்து முடிந்திருக்கிறது.

“உங்கள் ஆட்சியின் இன ஒதுக்கல் கொள்கையையும், அதன் பயனால் விளைந்திருக்கும் உயிர்ச் சேதங்களையும் காமன்வெல்த்தில் பங்கு கொண்டிருக்கிற பத்து நாடுகளின் பிரதமர்களாகிய நாங்கள் மனப்பூர்வமாக எதிர்க்கிறோம்” என்ற ஒரு கையெழுத்திட்ட தீர்மானத்தைக் கூட்டறிக்கையின்போது சேர்ப்பதற்காகப் பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன் பட்டபாட்டைப் பத்திரிகையாளர்களே கண்டு பரிதாபப்பட்டனர். இவ்வளவு இன்னல்களுக்குப் பின்பும் “தென் ஆப்பிரிக்க வெளிவிவகார மந்திரியோடு பேச்சு நடத்தினோம். கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. தென் ஆப்பிரிக்கப் பிரச்சினை உள்நாட்டு விவகாரம் என்ற கோட்டிலேயே நின்று பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது” என்ற ஒரு தீர்மானத்தைதான் மிகவும் ‘பயபக்தி’யோடு கொண்டுவர முடிந்தது.

ஒரு யானையைத் தொட்டுப்பார்த்து விவரித்த நான்கு குருடர்களின் கதையோடு காமன்வெல்த் அமைப்பையும் ஒப்பிடுவார்கள் அதன் பயனற்ற தன்மையை உணர்ந்திருக்கும் அரசியல் விமர்சகர்கள். யானையின் அங்கங்களை விவரித்த குருடர்களின் நிலைதான் காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கும் பிரதமர்களுக்கும். ஆனால், எப்படி, குருடர்களின் விளக்கங்களுக்கு அப்பாலும் யானை என்ற ஒன்று இருந்ததோ, அப்படியே அமைப்பில் அங்கம் வகிக்கும் பிரதமர்களுக்கு அப்பாலும் காமன்வெல்த் என்ற ஒரு ஸ்தாபனம் இருக்கிறது! இதைத் தவிர இந்த அமைப்பில் வேறெந்த “உண்மை”யும் இல்லை!

இலண்டன் விமான நிலையத்தில் இறங்கியதும் ஒரு நிருபர் கேட்ட கேள்விக்கு இந்தியப் பிரதமர் நேரு பதில் கூறினார்: “காமன்வெல்த் அமைப்புக்கு ஒரு வரையறுத்த இலக்கணம் கிடையாது. அந்த வகையில் அது ஒரு ‘நீள் தன்மை’யுடைய ஒரு அங்கம்”. அவரது கூற்றுப்படியே பார்த்தாலும், “நீள் தன்மையுடைய ஒரு அமைப்புத்தான்; தென் ஆப்பிரிக்க இனவெறி ஒரு உள்நாட்டு விவகாரம் என்ற பொருந்தாத கூற்றைச் சொல்லிக் கடமையினின்றும் மாறுபட்டிருக்கிறது. காமன்வெல்த்தின் நீள் தன்மையை உபயோகப்படுத்திக்கொண்டு தென் ஆப்பிரிக்க பிரச்சினையின் மனித உரிமை பற்றிய உண்மையை அந்நாட்டின் ஆட்சியினருக்கு உணர்த்தும் பொறுப்பினின்றும் வழுவியிருக்கிறார்கள் மற்றைய பத்து நாடுகளின் பிரதமர்களும்.

குற்றம் புரிந்தவர்கள் யாரும் தலைநிமிர்ந்து நடக்க மாட்டார்கள் — நடக்கவும் முடியாது. குற்றத்தை விசாரிக்கும் உரிமைபெற்றவர்கள் யாரும் கோழையைப்போல் பயந்து நடுங்கமாட்டார்கள். இது சமுதாய நாகரிகம். ஆனால் நடந்த காமன்வெல்த் கூட்டம் கையாண்ட அரசியல் நாகரிகமோ இதற்கு முற்றிலும் மாறுபட்டது. மனித இனத்துக்குக் குற்றம் புரிந்திருக்கும் தென் ஆப்பிரிக்க ஆட்சியின் பிரதிநிதி, தான் புரிந்தது குற்றம் என்பதையே ஒப்ப மறுத்தார். “ஒப்புதல் தந்தாலும் தராவிட்டாலும் உங்கள் ஆட்சி மனித உண்மையை மதிக்க மறுக்கிறது.” என்று இடித்துக்கூறப் பயந்து கோழையைப்போல் நடந்துகொண்டார்கள் பெரும்பாலான காமன்வெல்த் பிரதமர்கள்.

“நான், இங்கு, குற்றம்புரிந்த ஒருவனாக வரவில்லை; செய்த குற்றத்திற்கு மன்னிப்புத் தேடுபவனாகவும் வரவில்லை” என்றார் தென் ஆப்பிரிக்கப் பிரதிநிதி எரிக்லோ. அதோடுமட்டுமல்ல. “ஆஸ்திரேலியாவிலும் கனடாவிலும் இல்லாத சமுதாய ஏற்றத் தாழ்வுகளையா எனது தென் ஆப்பிரிக்காவில் கண்டுவிட்டீர்கள்?” என்று மற்ற நாடுகளில் இருக்கின்ற “அழுக்கு”களையும் வெளியாருக்குக் காட்டினார் “தென் ஆப்பிரிக்கா எப்பொழுதும் எந்த வகையிலும் தனது இன ஒதுக்கல் கொள்கையைக் கைவிடப்போவ

தில்லை'' என்று பிரதமர்களின் மாநாடு நடந்துகொண்டிருக்கும் சமயத்தில்கூடப் பத்திரிகையாளருக்குக் கூறினர் எரிக்லோ.

நடந்த காமன்வெல்த் கூட்டத்தில் தென் ஆப்பிரிக்கப் பிரதிநிதி உதிர்த்த சிலவரிகள் மேற்கண்டவை. எப்படியோ தென் ஆப்பிரிக்க தேசிய மக்கள் ஏமாற்றப்பட்டு விட்டார்கள். அவர்களுக்கென்றிருந்த ஒரே நம்பிக்கை ஒளியும் அற்றுப்போய்விட்டது. அவர்கள் இன்னும் இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும். மனித உரிமையைப் பெறுவதற்காக மனித உயிர்கள் பல தியாகம் செய்துதான் ஆகவேண்டும் என்ற முடிவைத் தான் கொடுத்திருக்கிறது இத்தடவை நடந்தேறிய காமன்வெல்த். தென் ஆப்பிரிக்க இன ஒதுக்கல் ஒரு பொதுப் பிரச்சினை—உலக விவகாரம் என்ற அடிப்படைப் பாடத்தைப் புகட்டவே தகுதியற்றதாய் நடந்துகொண்டிருக்கிறது இக்கூட்டம்.

எந்த வகையிலும் பிரிட்டன் தனது ஏகாதிபத்திய உயர்வுத் தன்மையை எப்போதும் இழந்துவிடத் தயாராயில்லை. இந்த ஒரு நோக்கத்துக்காகவே காமன்வெல்த்தின் முன் எந்த அளவு சோதனை வந்தாலும் அதனைத் திறமையாகத் தட்டிக்கழித்து அமைப்பின் இயக்கத்துக்கு எந்தவித ஆபத்தும் நேர்ந்துவிடாமல் கவனித்துக் கொள்ளுகிறது. காமன்வெல்த் அமைப்புக்கு ஊறு நேரலாம் என்ற ஒரே சுயநல காரணத்திற்காகப் பொதுநலத்தை மதிக்க மறுக்கிறது பிரிட்டன். தென் ஆப்பிரிக்க இனவெறிக் கொள்கையைக் கண்டிப்பதால்கூட காமன்வெல்த் அமைப்புக் குலைய நேரலாம் என்று பயமடைகிறது இங்கிலாந்து. அவ்வாறு காமன்வெல்த் அமைப்புக்குப் பங்கம் நேர்வதால் அதில் அங்கம் வகிக்கும் நாடுகள் அனைத்தும் அடியோடு அழிந்துபடப் போவதில்லை. ஆனால் "தென் ஆப்பிரிக்க இன ஒதுக்கல் கொள்கையால் ஆப்பிரிக்காவின் ஒரு முக்கிய பாகமே முழுவதும் அழிய நேரிடும்.'' இந்த உண்மை நடந்தேறிய மாநாட்டில் அடியோடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய ஒரு பயனற்ற அமைப்பில்தான் இந்தியத் துணைக்கண்டமும் நீண்ட காலமாக ஒரு அங்கம் வகித்து வருகிறது. முன்பு இங்குள்ள மக்கள் தங்கள் நாட்டின் அடிமைத் தன்மையின் மூலம் இங்கிலாந்தின் அரசிக்கு அரச விசுவாசத்தை தெரிவித்து வந்தார்கள். இப்போது அதை ஒரு பிரதமர்கள் காமன்வெல்த் என்ற அமைப்பின் மூலம் ஒரு ஆண்டுகூடத் தவருமல் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு விசுவாசத்தைக் காட்டி வருவதனால் காஷ்மீர் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடவில்லை. கோவா விவகாரம் ஒரு முடிவுக்கு வந்துவிடவில்லை. இருந்தாலும் இத்துணைக் கண்டம்தான் ஒவ்வொரு கூட்டத்திலும் தவருமல் கலந்துகொண்டிருக்கிற ஒரு உறுப்பு நாடு!

ஆனால் இந்த உண்மையெல்லாம் ஐந்தாண்டுக்கு ஒரு முறை காங்கிரசுக்கு ஒட்டளிக்கும் குடிமக்களில் பலருக்குத் தெரியாது.

தென் ஆப்பிரிக்க மக்கள் தங்கள் மனித உரிமையைப் பெற இன்னும் நீண்ட பயணம் மேற்கொண்டாகவேண்டும் போலும்.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

கின்னுபின்னமாகி ஓடுகின்றனர். சேரன்—செங்குட்டுவன் வில்லா நோக அவர்களின் ஓட்டத்தினைக் கண்டு சிரிக்கிருன்.]

செங்:- ஆகா... ஆகா... வில்லவா ஐயோ பாவம்... வாய் மதம்பேசி வலிய வம்புக்கு வந்து இப்பொழுது விழுந்தடித்துக் கொண்டு, நீ முந்தி நான் முந்தியென்று பந்தயம் போட்டு ஓடும் பரிதாபக் காட்சியைப் பார். வில்லவா... பார்...

(ஓடுபவர்களில் ஒருவனை இழுத்து வந்து) தூ...... மானஈனமற்ற மடையர்களே! உங்களுக்கென்று ஒரு சாஸ்திரம், சம்பிரதாயம், வேதம், விதியெல்லாம். அதன் காவலர்கள் நீங்கள்! சே... ஓடுங்கள்... (ஆரிய மன்னன் ஓடுகிருன்.)

வில்:- கிடக்கிருர்கள்......ஆண்மையற்ற வக்கிரங்கள், வீரத்தை விளையாட்டுக் கூடமென்று எண்ணிவிட்ட வீணர்கள்.

செங்:- வில்லவா... இவர்களை இத்தோடு விட்டுவிடக்கூடாது. அவர்களின் பாடிவீடு நோக்கிப் படையெடுப்போம். தமிழ் மாதைப் பழித்த அந்தத் தருக்கர்களின் தலைகளைக் கொய்வோம். தென்னகத்து மண்ணின் ஆற்றலை அந்த மதியிழந்த மன்னர்கள் அறியச் செய்வோம். குலத்திலே தாழ்ச்சி உயர்ச்சி பேசும் அந்தக் குடிகேடர்களின் கொள்கைக்கு முடிவு கட்டுவோம். வில்லவா... மன்னிப்பு... நம்மையல்லவா மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று கூறினர் அந்த மதோன்மத்தர்கள். நாம்... அந்த ஆரியக்கூட்டத்தை அடியோடு வளைத்து நம் அடிபணியவைத்து ஆயிர ஆயிர முறை மன்னிப்புக் கேட்கச் செய்வோம். தமிழாற்றலை அறியச் செய்வோம் வா... புறப்படு... இவர்களை விடக்கூடாது.

[நற்சோணை அங்கு வருகிருர்கள்]

நற்:- செங்குட்டுவா...

வில்.- இளவரசே...! அன்னை...! அன்னையார் வருகிருர்கள்..!

நற்:- சற்றுமுன்... இங்கென்னப்பா ஒரே அமளி?...

செங்:- ஆம் அம்மா! நீங்கள் நீராட வந்த துறை ஆரிய மன்னர்கள் மட்டும் குளிப்பதற்கு உரியதாம். நம்போன்ருர் நீராடக்கூடாதாம் வேத விதிப்படி அது தவரும்... நாமெல்லாம் சூத்திரர்களாம்... சூத்திரர்கள்!

நற்:- நல்ல விளக்கமப்பா... விநோதமாக இருக்கிறது... அப்புறம்...

(13-ம் பக்கம் பார்க்க)



காஞ்சீபுரம்

22—3—60.

தம்பி !

ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, உலகைச் சுற்றிப்பார்த்துவிட்டு
வாக் இளம்பினர்; ஹுவான் சுவாங் எனும் சீனப் பேரறிஞர். அவருடைய குறிப்புகள்,
இன்றும் வரலாற்றுக்கு அணியாக உள்ளன. அவர் பல நாடுகளிலே, இருந்துவந்த
வளம், வாழ்க்கை முறை, ஆகியவற்றைக் கூர்ந்துநோக்கிக் கண்டறிந்து, கூடுமான
வரையில் மிகைப்படுத்தாமலும், குறைத்திடாமலும் தமது சொந்த விருப்பு வெறுப்பு
களுக்கேற்ப, நிகழ்ச்சிகளை, நிலைமைகளை மாற்றுமலும், தெளிவாக எடுத்துக் கூறினர்.

அவருடைய ஏடு இன்றும் பல பொருளை அறிந்துகொள்ளச் செய்
திடும், அரியதோர் களஞ்சியமாக இருந்து வருகிறது.

"உலகிலே பல்வேறு நாடுகளையும் காண விழைகிறேன். மக்கள்,
எப்படி எப்படி எல்லாம் வாழ்ந்து வருகிருர்கள், நாட்டு வளம் என்
னென்ன வகையின உள்ளன, அரசு முறைகள் யாவை, நெறிகள் எவை
யெவை உள்ளன என்பனவற்றைக் கண்டறிய விரும்புகிறேன். சென்று
வர ஒப்பம் அளியுங்கள், இறையே!" என்று, அவர், மன்னரைக் கண்டு
கேட்டார்.

மாமன்னர், 'டாங்' என்பவர், மகிழ்ச்சியுடன் ஒப்பம் அளித்தார்; பருகிடப்
பானம் கொடுத்தார்! அற்புதமான, பானம்!! பழரசமோ, பாகோ, பாலோ, தேநீரோ,
அல்லது எந்த நோயும் அணுகா திருக்கச் செய்யும் மாமருந்தோ; மாமன்னர், தந்த
பானம் யாதோ, என்றுதானே தம்பி! யோசித்துக்கொண்டிருக்கிருய். சாதாரணமான பானம் நிரப்பி இருந்த

ஒருபிடி மண்ணை அள்ளி பருகச்,
குவளையில் போட்டுப், பருகச்சொன்னர்.

மாமன்னரிடம் சென்று, மலை வனம் வனாந்தரங்களைக் கடந்து மண்டலம் பல
சென்றுவர விழைகிறேன், என்று கூறுகிருர், ஒருவர்; மணியும் பொனனும், மருந்
தும் பிறவும் கொடுத்து, அவருக்கு உற்சாகமளிக்கவேண்டியதன்றே, முறை. மண்
ணைப் பானத்தில் கலந்து பருகச் சொல்வதா! ஈதென்ன பேதைமை! என்று எண்ணி
டவும், கோபித்திடவுங்கூடத் தோன்றும்.

மதியற்றே, மண்டைக் கனத்தாலோ அல்ல, மாமன்னர் அதுபோலச்
செய்தது.

உலகம் காணச் செல்கிருர், எங்கெந்த நாட்டிலே என்னென்ன எழில் இருக்
கிறதோ, சீரும் செல்வமும் உளவோ, அவைகளைக் கண்டு, சீனத்திலே இல்லையே

எழுச்சி வெள்ளம்

இத்தகைய சிறப்புகள் என்றெண்ணிச் சிந்தை நொந்து, தாயகத்தைத் தாழ்வாகக் கருதத் தலைப் பட்டு, நாட்டுப்பற்று அற்றவராகிவிட்டால் நல்ல தல்லவே! நாடு பல சுற்றினாலும், 'நம்நாடு' என்ற உணர்ச்சி பாழ்படலாகாதே! என் நாட்டிலே இல்லாத ஏற்றமும் எழிலும், பொழிலும் புதுமையும், வளமும் இங்கு இருக்கிறது, என்று எண்ணத்தக்க விதமாக, பல நாடுகள் இருக்கலாம்; ஆனால், அவை, 'என்நாடு' ஆகுமா? என்ற எண்ணம், எப்போதும் இருந்தாக வேண்டுமே! இவர், செல்லும் நாடுகளிலே, செம் பொன் ஓடுகள் வேய்ந்த மாடங்கள் இருக்கலாம், கட்டித் தங்கத்தைக் கொட்டி மகிழ்ந்திருக்கும் கோமான்கள் இருக்கலாம், விண்ணை முட்டும் மலை களும், மனதை மருட்டும் மாநதிகளும், செந்நெல் கொழிக்கும் வயல்களும், செந்தாமரை பூத்திடும் வாவி களும், கிள்ளைக்கு மொழி அழகும், மயிலுக்கு நடை நயமும் கற்றுத்தருபவளோ இக் கன்னி என்று கவி ஞர்கள் கூறத்தக்க பாவையரும் இருக்கலாம், அகழி சூழ்ந்த கோட்டைகளும், அவை எமக்கு எம்மாத்திரம் என்று கேட்டிடும் மதயானைகளும், கடுகிச் செல்வோம் களத்தை நோக்கி என்று கூறிடும் பரியும், பிறவும், காண்போருக்குக் கலக்கம் தரும் அளவு இருக்கலாம், பாய்ந்தோடி வரும் ஆற்று நீரிலே அழகுறத் தோன் றிடும் நுரையன்ன நிறம்கொண்ட துகில் இருக்கலாம் —ஆனால் இவை கண்டு, இன்புற்று, இதற்கு ஈடோ எந்தன் நாடு! இத்துணை வளமுள்ள இஃதன்றோ,நாடு நான் பிறந்த பூமி, குறித்து, எனக்கேயன்றோ வெட்க மாக இருக்கிறது!—என்று எண்ணம் உருவானால், நாட்டுப்பற்று நாசமாகுமன்றோ!!

இவரோ, நாடுபல செல்கிறார், காண; காண் பதால், சீனம் எனும் தாயகத்தின்மீது உள்ளபற்று அற்றுப்போய்விடக் கூடாதே! எனவே, இவருக்கு நாட்டுப்பற்றின் அருமையினை உணர்த்தியாகவேண் டும் என்று எண்ணினார், மாமன்னர் டாங்! எனவே தான், தாயகத்தின் மண்ணைப் பானத்தில் கலந்து பருகச்செய்து, பிறகு "வேற்று நாட்டவர் தந்திட வல்ல, கோடிச் செம்பொன்னையும்விட, பிறந்த நாட்டு மண் சிறந்தது அல்லவா?" என்று கேட்டார்.

உலகு சுற்றி, அறிவினைப் பெற்றிட விரும்பினார், ஹுவான் சுவாங்; புறப்படும்போதே, பேரறிவு பெற் றுச் செல்க என்று கூறுமற் கூறி வழியனுப்பிவைத் தார், மாமன்னர்.

நாட்டுப்பற்று, பிற நாடுகள் காண்பதால் கெட் டுப்போகக்கூடும், என்று எண்ணினார் மாமன்னர்; ஆனால் நாடுபல சென்று காண்போருக்கு, அந்தந்த நாட்டு மக்கள், தத்தமது நாட்டினிடம் பற்றுவைத் திருப்பதைக் காண்பதால், காண்போருக்கு, தம் தாய கத்தின்மீது உள்ள 'பற்று' வளரும், குறையாது.

கண்ணைக் கவரும் வனப்பு, சீமையில்; காடு சூழ்ந்த இடம், ஆப்பிரிக்க பூபாகம்! நவநாகரிகம் கொழிக்குமிடம் சீமை; காட்டுமிராண்டிக் கோலம் என்று கூறத்தக்க நடை உடை பாவனை ஆப்பிரிக்க பூபாகத்தில்! ஆடலழகிகள் ஆயிரமாயிரம் அங்கே! ஆவேசமாடிடும் அலங்கோலவதிகள் ஆப்பிரிக் காவில்!

பாங்குநிறை பாராளுமன்ற முறைகள் பரங்கியர் நாட்டில், பழங்கால அமுல் ஆப்பிரிக்காவில்!

எனினும், சீமை சென்று வாழ்ந்துவந்த, ஆப் பிரிக்க இளைஞர்கள் செச்சே! நமது நாடும் ஒருநாடா! காட்டுமுறை அல்லவா காண்கிறோம்! இந்த, அழ கும் அறிவும், ஆற்றலும், அங்கு ஏது. என்று எண்ணி நாட்டுப் பற்றினை நாசமாக்கிக்கொண்டாரில்லை! நாட் டுப்பற்று, கொழுந்துவிட்டு எரியலாயிற்று.

இவ்வளவு செல்வம் கொழிக்கிறது இங்கே; என் நாட்டிலே சீரழிவு அல்லவா, உள்ள நிலைமை! இத் துணை புகழொளி வீசுகிறது இங்கே; என் நாடு, இருண்டல்லவா கிடக்கிறது! இவர்கள் இங்கு, வேற்றானுக்கு தங்க இடம் தருகிறார்கள், தகுதி பெற்றோருக்கு உதவியுமளிக்கிறார்கள், ஆனால் அரசு நடாத்த, அனுமதிக்கின்றனரோ? என் நாட்டிலே, எவனெவனோ ஆளுகிறான், எப்படியெப்படியோ ஆளு கிறான்! இங்குள்ள மக்கள், இருக்க இடம், செய்யத் தொழில், வாழ வசதி, பெற்று இருக்கிறார்கள்; என் நாட்டிலே மக்கள், மிருக வாழ்க்கையில் அல்லவா உள்ளனர்! இங்கு, நாட்டுப்பற்றும், உரிமை உணர்ச்சி யும், ஊட்டப்பட்டு வருகிற நேர்த்தியுடன், என் நாட் டிலே, எடுப்பார் கைப்பிள்ளையாகிடும் இழிநிலையும், எதற்கும் அஞ்சிடும் போக்கும், நத்திப்பிழைத்திடும் முறையும் இருக்கிறதே, அதனை, ஒப்பிட்டுப் பார்த் தால், செச்சே! எனக்கே வெட்கமாக அல்லவா இருக் கிறது! பிறநாட்டான் ஒரு சுடுசொல் வீசினாலும் இங் குள்ள மக்கள் சீறிக் கேட்கின்றனர்! என் நாட்டிலே உள்ளவர்களை; கருப்பர்! என்று, இழிமொழியால் அழைக்கின்றனர்; சினம்கொள்வார் இல்லை!!

எமது நாடு, எமது மொழி, எமது கலை, எமது அரசு, எமது செல்வம், என்று இங்கு, எழுச்சி பொங் கிடும் நிலையில், பேசிடக் கேட்கிறோம்; இந்த ஆர்வம், எழுச்சி, பற்று, என் நாட்டிலே, இல்லையே! ஏன்? ஏன்? —என்றுதான், எண்ணத் தலைப்பட்டனர்; எழுச்சியின் தூதுவராயினர்; தாயகம் திரும்பினர்,

தலைகளை நொறுக்கிட; ஒவ்வொன்றாக இன்று, விடுதலை பெற்றுவருகின்றன, ஆப்பிரிக்க பூபாகத்து, நாடுகள்! புத்தம் புது அரசுகள்!!

*

இன்று விடுதலைக் கொடியைப் பறக்கவிடும், இந்த நாடுகளை எல்லாம்விட, வரலாற்றுச் சிறப்புள்ள நாட்டிலே, நாம் பிறந்தோம்; எனினும் நமது இனம், அதற்குரிய மொழி, அதனால் கிடைத்திடும் வாழ்க்கை முறை எனும் எல்லாவற்றையும் அழித்து வருகின்றனர்; எதிர்த்து அல்ல, தம்பி! அணைத்து!!

வைதீகர்கள், எலும்பைப் பெண்ணாக்கிய மொழி, எம்மான் கழகத்தில் அமர்ந்து வளர்த்த மொழி என்று கூறிக் களிப்பூட்டுகிறார்கள்.

வரலாற்றுப்பேராசிரியர்களோ, இம்மொழி செம்மொழி, இயல் இசை நாடகமெனும் மூன்று வகையினதாக அமைந்த மொழி, என்று கூறுகின்றனர்.

எனினும், அந்தத் தனிமொழி, தத்தளிக்கிறது; தாதிவேலை பார்த்திடச் சொல்கிறார்கள், தருக்கர்கள்.

வேற்று நாட்டவரெல்லாம் கண்டு, வியந்துரைக்கின்றனர், நம் மொழியின் தனிச்சிறப்புப்பற்றி; ஆயின் கோல்கொண்டோர், அம்மொழிக்கு, வெள்ளாட்டி வேலைதான், என்று கூறுகின்றனர், ஏதோ இதாகிலும் கிடைத்ததே என்று இளித்துக் கிடப்போரிடம் ஆட்சி சிக்கிக் கிடக்கிறது.

தம்பி! செப்பேடுகளில், கல்வெட்டுக்களில், காண்கிறோம் தமிழ்மொழியை! என்ன பொருள் என்கிறாய்? சீரும் சிறப்பும் மிகுந்திருந்தது, 'பேரும் புகழும்' பெற்றிருந்தது, நம்நாடு என்பதன்றோ பொருள்!

வெற்றிகளைக் குறித்திட, விருதுகளைத் தந்திட, செப்பேடுகள், கல்வெட்டுகள்!

இமயத்தில் கொடி நாட்டினான், கனகவிசயர் தலைமீது கல் ஏற்றினான், கங்கைகொண்டான், கடாரம் வென்றான், கலிங்கத்தை கதிகலங்கச் செய்தான், வாதாபி வென்றான், சிங்களம் சென்றான், வென்றான்—காவிரிக்குக் கரை அமைத்தான்—என்றெல்லாம், நமது இனத்தின் முன்னாள் ஏற்றத்தைக் குறித்திருக்கிறார்கள்—தமிழ் மொழியில்.

செப்பேட்டுக்கும் கல்வெட்டுக்கும் தகுதிபெற்றுத் திகழ்ந்த தமிழ் மொழிக்கு, இன்று, அஞ்சல் அட்டையிலேகூட, இடம் இல்லை, தம்பி! ஆமாம்! என்று ஆச்சரியத்துடன் சிலரும், ஆமாம்! என்று ஆயாசத்துடன் பலரும், கூறி கேட்கிறோமேயன்றி, அப்படியா! ஏன்? என்று, கேட்டுச் சீறி எழுந்து, கேட்டினை எதிர்த்து ஒழித்திட, யார் உளர்? எங்கே உளர்?

நெடுஞ்சாலைகளிலே உள்ள கற்களிலே, இந்தி! நெடுநல்வாடையின் சிறப்புபற்றி உரையாற்றிட, ஆசிரியர் உளர், கல்லூரிகளில்!!

கன்னித்தமிழ்! என்று புகழ் பாடுகின்றனர், புலவோர்; எனினும் "கற்றிடுக இந்தியினை, பிழைத்திட அதுதான் வழி" என்கின்றனர் அமைச்சர்கள். அவர்கள் தமிழரே! ஐயமில்லை! ஆயின் அமைச்சராகி உள்ளனர்! அந்த நிலை கெடாதிருக்க, ஆட்டி வைக்கிறபடி ஆடும் போக்கினராகிவிட்டனர்!!

ஆச்சரியம், அம்மட்டோடு, இல்லை! எம்மைத்தான் மக்கள், விரும்பி, வாக்களித்து அரசோச்ச ஆணையிடுகின்றனர்! என்று வேறு, அவர்கள் மார் தட்டிக் கூறுகின்றனர்; தலைகுனிந்து கேட்டுக்கொள்ள வேண்டிய அளவுதான், எண்ணிக்கையில், பிற கட்சிகள் உள்ளன.

மொழியின் நிலையே இது எனின், மற்றத் துறைகளிலே, என்னென்ன கொடுமைகள் ஏற்பட்டுத் தீரும் என்பதனை எடுத்தியம்பத்தான் வேண்டுமா!

*

இந்திமொழி கட்டாயம் இல்லை; திணிக்கப்போவதில்லை; ஆட்சிமொழியாக அவசரப்பட்டு ஆக்கிடப் போவதில்லை; ஆங்கிலத்தை உடனடியாக அறவே நீக்கிடப்போவதுமில்லை; என்று, ஆணவத்தை பதுங்கவைத்துக்கொண்டு, பேசிடக் கேட்கிறோம், எனினும், மெள்ள மெள்ள படரும் நோய், போல, இந்தி, எல்லாச் சந்து பொந்துகளிலும் நுழைகிறது; குழைகிறது, நம் தன்மானம் அழிக்கிறது.

தமிழகத்தில் மட்டுமே, இந்தி எதிர்ப்பு என்பது, பட்டுப்போகாத நிலையில், நீறுபூத்த நெருப்பு நிலையில் இருந்து வருகிறது.

வங்கம் போன்ற வேறு சில இடங்களில், வாதாட வல்லுநர்கள் உள்ளனர், வரலாற்றுச் சான்று காட்டிச் சாடுவோர் உள்ளனர், மொழிவளம் பற்றிய விளக்க உரையாற்றி, இந்தி மொழிக்கு, பொதுமொழியாகிடும் தகுதி இல்லை என்று எடுத்துக்காட்டுவோர் உளர்—ஆனால், எமக்கு ஏன் இந்தி? எமக்கு ஏன் ஒரு பொது மொழி? என்று கேட்டிடத் துணிவு எழவில்லை.

சுவிட்சர்லாந்து நாட்டினைக் காட்டி, பலமொழிகள் அங்கு, தேசியமொழிகளாக உள்ளனவே, அதுபோல; இங்கும், பலமொழிகள் இருக்கட்டுமே, இந்திமொழிக்கென, ஏன் ஓர் தனித்தகுதி தேடித் தருகிறீர்கள், என்று கேட்டு அறிவு கொளுத்தப்பார்க்கின்றனர்.

இவை, அவ்வளவுக்கும் இந்தி புகுத்துவோர், ஒரே வரியில், சமாதானம் கூறுகின்றனர்; உமது மொழி அழிக்கப்படமாட்டாது; இந்திமொழி, உங்கள் தாய்மொழிக்கென உள்ள இடத்தைப் பிடித்துக் கொள்ளாது; இந்தி, அகில—இந்திய உறவுக்காக, அகில—இந்திய ஆட்சியின் வசதிக்காக, அகில—இந்திய அலுவலகங்களுக்குத் துணையாக, இருக்கிறது, வேறொன்றுமில்லை; மிரண்டுவிடவேண்டாம்; வெகுண்டு எழவேண்டாம் என்று கூறுகின்றனர்; அதுபோது, பாஞ்சாலத்தாராகட்டும், மராட்டியராகட்டும், வங்கத்தாராகட்டும், அந்த வாதம் சரியா, என்பது பற்றித்தான் ஆராய்கின்றனரேயன்றி, போதுமான பாதுகாப்பு தமது ராஜ்ய மொழிகளுக்கு உள்ளனவா, என்றுதான் கேட்கின்றனரேயன்றி அகில—இந்திய அலுவலகங்களிலே, இந்தி பேசாதார்களுக்கு ஊறு விளைவிக்கப்படுமா என்று உசாவுகின்றனரேயன்றி, எமக்கு ஏன் அகில—இந்திய ஆட்சி? என்று கேட்கிறார்களில்லை!!

தமிழர், மட்டுமே கேட்கிறோம், அதனை!

தேவையற்ற, தீதுபயக்கும், அகில—இந்திய ஆட்சி எனும் ஏற்பாட்டிலே எங்களைச் சிக்கவைத்தது ஏன்? சிக்க வைத்துவிட்டு, அதிலே, இருந்திட வசதி தேவை அல்லவா? அந்த வசதியைப்பெற, இந்தி அவசியமல்லவா, என்று பேசுவது, வெந்த புண்ணிலே வேல் சொருகுவதாகும்—வேண்டாம் இந்த விபரீதம்!—என்று கூறுகிறோம்.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே ஏற்றம்பெற்றது, எமது மொழி! அம்மொழி போதும், எமக்கு, எமது அரசுக்கு! எனினும், தமிழர், தரணி எங்கணும் தொடர்பு கொண்டிட, அறிவு திரட்டிட, வாணிபம் நடாத்திட, உறுதுணையாக, தமிழுடன் உலகப் பொது மொழியாம் ஆங்கிலம் போதும்! என்று உரைக்கிறோம்.

தொல்காப்பியம் முதற்கொண்டு தூதுவரை உள்ள, இலக்கியச் செல்வம், தமிழில், உளது!

இனி, ஆங்கில மொழியின் துணைபெறின், அகில உலக பேச்சுத் தொடர்புக்கு மட்டுமல்ல, உலக நாடுகள் பலவற்றிலும், இன்றுவரை மலர்ந்துள்ள கருத்துக்களை அறிந்து தொடர்புகொள்ள வழி கிடைக்கிறது.

பண்டைய நாட்களில் பாங்குடன் விளங்கிய பாபிலோன், கிரீஸ், ரோம், சீனம்,—காணலாம் ஆங்கில மொழி மூலம்!

கன்பூஷியஸ், சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாடில், கான்ட், மில்—போன்ற மெய்ஞ்ஞானிகளுடன் உரையாடி; உள்ளத்துக்கு உவகை தேடிடலாம், நெறிகளில் நேர்த்தி பெறலாம், ஆங்கிலமொழியின் துணையால்.

உமார்கயாம் பாடலின் இனிமை, டாண்டே கவிதையின் கெம்பீரம் மில்டன் கவிதை காட்டிடும் உருக்கம், ஷெல்லி தந்திடும் எழுச்சி, யாவும், பெறலாம், இன்புறலாம், பயன் பெறலாம், ஆங்கில மொழியின் அருந்துணைகொண்டு.

ஆர்க்கிமிடீஸ், கலீலியோ, நியூடன், ஈன்ஸ்டின், போன்ற விஞ்ஞானிகளின் விளக்க உரைகளைப் பெறலாம் ஆங்கில மொழியின் துணைகொண்டு.

செனேகா, மார்லோ, ஷேக்ஸ்பியர், பென்ஜான்சன், மாலியர், பெர்னார்டுஷா,—எனும் உலகப் பெரும் புகழ் பெற்ற நாடகாசிரியர்களின் நல்லுரை யாவும், ஆங்கிலம் அளித்திடும்.

ஸ்காட், டிக்கன்ஸ், பால்சாக், மாபாசான்ட், ஜோலா, டால்ஸ்டாய், ஹெமிங்வே, மாகாம், பெர்ல்பக்,—என்பவர் போன்றோரின் சுவைமிகு கருத்தூட்டும் கதைகளை ஆங்கிலம் அளிக்கிறது!

மாக்கியவல்லியின் நரிக்குணமானாலும், மார்க்க அரேலியரின் வேதாந்தமானாலும், ராபஸ்பயரியின் முறையானாலும், ரூசோதரும் அரசியல் முறையானாலும், வால்டேர் தந்திட்ட புரட்சிக் கருத்தானாலும், லெனின் நடாத்திய புரட்சிப் பெருங்காதையாயினும், எல்லாம் அறிந்திட, அவரவர், எந்தெந்த மொழியினில் எழுதினரோ, அத்தனை மொழிகளையும் கற்றுத் தீரவேண்டும் என்றில்லை—ஆங்கிலம் அறிந்திடின் அவை அனைத்தையும் அறியலாம்.

அலெக்சாண்டரின் படைஎடுப்பிலிருந்து, அட்லியின் ஓய்வுவரையில், செங்கிஸ்கானின் வெறிச்செயலிலிருந்து நாசரின் வெற்றிவரையில், ஹுவான்சுவாங் நடத்திய பயணத்திலிருந்து தலாய்லாமாவின் 'விஜயம்' வரையில், ஆங்கிலம், அறிவிக்கிறது.

நெப்போலியனுடன் நடமாடலாம், நெல்சனுடன் உரையாடலாம், கிளாஸ்டனைக் காணலாம் கிராம்வெலிடம் பேசலாம், மாஜினியைக்கண்டு விடுதலையின் மேன்மைபற்றிய விளக்கம் பெறலாம், கரிபால்டியைக்கண்டு வீரச்செயலுக்குத் தேவையான உணர்ச்சியைப் பெறலாம், சிசிரோவின் முழக்கம், டெமாஸ்தனிசின் பேராற்றல், கேட்கலாம், ஆங்கிலத்தின் துணையுடன்.

ஆங்கிலத்தின் துணையுடன் அக்ராவில் நடமாடலாம், ஆக்ராவிலும் உரையாடலாம், பீகிங்கில் பேசலாம் பாரிசில்உலவலாம், மாட்ரிட்டானாலும் மாஸ்கோவானாலும், ஆட்டவாவானாலும், அங்காரா ஆனாலும்,

நேபிள்ஸ் நகரானாலும் ரோம்நகர் எனினும், வாஷிங்டனானாலும் டப்ளினானாலும், கற்றோர் உலாவும் எந்த இடமும் சென்று, உறவாடலாம், உரையாடலாம், ஆங்கிலம் தெரிந்தால்!

தொல்லையை நீக்கிக்கொள்ளப் பயன்படவில்லை எனினும், சென்ற திங்கள் நேருபண்டிதர், சீனத்துப் பிரதமர் சோ-என்-லாயுடன் உரையாட, ஆங்கிலம் உதவிசெய்தது! பிரிட்டிஷ் மகாராணியுடனும், டாக்டர் நிக்ருமாவுடனும், துங்குரஹிமானுடனும், ஆங்கிலத்தில்தான் பேசினார். பழைய மாணவரே வருக! பாரதப் பிரதமரே, வருக! — என்று, அவரை அவர் படித்த கல்லூரியில் ஆங்கில மொழியில்தான், இன்றைய மாணவரும் ஆசிரியரும், வரவேற்று உபசரித்தனர்.

அவர், தம்முடைய பேரப்பிள்ளைகளுடன் பேசுவதானாலும், ஆங்கிலம்தான்—ஏனெனில் அவர்கள், 'ஐரோப்பியநாடு' சென்று, கல்விபயின்ற வாய்ப்பினர்!

நிலை இங்ஙன்மிருக்க, இந்தியை, நேரு துரைத்தனத்தார், ஏன் தூக்கித் தலைமீதுவைத்து, சுமந்திடச் சொல்கின்றனர்? அகில இந்தியா எனும், ஏகாதிபத்தியத்துக்கு, அது முத்திரை மொழி! அந்த முத்திரை பொறிக்கப்பட்டவர்களெல்லாம், டில்லியின் அடிமைகள் என்பது பொருள். அதற்காகவே இந்தியை, ஏற்றுக்கொண்டாகவேண்டும் என்கின்றனர்.

எனவே, இந்தி மொழியைப் புகுத்துவதற்கு என்ன முறைகள் கையாளப்படுகின்றன, என்பது பற்றி, மற்றவர், கவனம்செலுத்தி, முறைகளை மாற்றவோ, கடுமையைக் குறைக்கவோ, வாதாடுகிறார்கள் — அவர்களுக்கு அதுபோதும் — ஆனால் நாமோ, இந்தி மொழியை, எந்த நோக்கத்துக்காகப் புகுத்துகிறார்கள் என்பதை முக்கியமாகக் கவனிக்கவேண்டியவர்களாகிறோம்— அந்த நோக்கத்தின் முழுப்பொருளையும், நமது மக்கள் உணர்ந்துகொள்ளச் செய்தாக வேண்டிய பணியினைச் செய்யவேண்டியவர்களாகிறோம் — அந்த நோக்கத்தை எதிர்த்துப் போரிட்டு, இந்தியைக் கருவியாகக்கொண்டு, தமது ஏகாதிபத்தியத்தை வலுவாக்கிக்கொள்ளவேண்டும் என்று முனைந்து நிற்கும், டில்லி ஏகாதிபத்தியத்தையே எதிர்த்துத் தாயகவிடுதலைக்காக, தனி அரசு அமைப்புக்காகப் போராட வேண்டியவர்களாகிறோம்.

தெரிகிறதா, தம்பி! நம்முன் உள்ள; பணியின் தன்மையும் கடுமையும்! தெரிந்து செயலாற்ற வேண்டும்!

கிளர்ச்சியில், இரத்தம் சிந்த, சிறைப்பட, உயிரிழக்க, உடைமை இழக்க, அச்சப்பட்டுக்கொண்டு ஓடி ஒளிந்திடும் இடுப்பொடிந்தவர்கள், நம்மிடம் இல்லை.

நமது தாய்மார்களேகூட, பத்தாண்டுகளுக்கு முன்பு, "மகன்..." என்று விம்மிவிம்மித் துவக்கி, "சிறையில்!" என்று முடித்து, கண்களைத் துடைத்துக்கொள்ளும் நிலையில் இருந்தனர்; இப்போது, "என் மகன்கூடத்தான், எதிர்ப்பில் ஈடுபட்டான்; சிறை புகுந்தான்!" என்று பெருமிதத்துடன் கூறத்தக்க, நல்ல மனப்பக்குவம் பெற்றுவிட்டுள்ளனர்.

அதேபோது, இந்தியைப் புகுத்தி, நம்மை இழிநிலைக்கு இழுத்துச் செல்லும், ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகளாக உள்ள காங்கிரஸ் அமைச்சர்களோ, இவர்கள் எதிர்க்கிறார்கள்; கிளர்ச்சி நடத்துகிறார்கள்; ஜெயிலுக்குப் போகிறார்கள்; ஆனால், பொதுமக்கள் எங்கள் பக்கம்தான் இருக்கிறார்கள்; எமக்கே ஓட்டளிக்கிறார்கள்; எனவே கிளர்ச்சிக்காரர்களுக்கு, உண்மையான பொதுமக்கள் ஆதரவு கிடையாது' என்று பொய்யுரை பேசி, எண்ணிக்கை பலத்தை மட்டுமே ஜனநாயகம் என்று எண்ணிக்கொண்டிருக்கும், வெளியார்களை, நம்பவைக்க முயல்வர்.

இந்த 'இடுக்கி'யையும், நாம் அலட்சியப்படுத்திவிடுவதற்கில்லை.

ஆனால், நமது கழகம் இன்று, வளர்ந்துள்ள நிலை, எதற்கும் துணியலாம் என்ற எண்ணத்தைத்தான் உறுதிப்படுத்திக்கொண்டு வருகிறது.

இதுநாள் வரையிலும், உணராது இருந்து வந்தவர்களும்கூட, இன்று, இந்திமொழிப் பிரச்சினை, வெறும் மொழிப்பிரச்சினை அல்ல, நிர்வாகத்துக்காக ஏற்படுத்தப்படும், வழிமுறை அல்ல; ஒரு புதிய ஏகாதிபத்தியம், நீட்டிடும் சூட்டுக்கோல்! இவரெல்லாம் எமது அடிமைகள்! நிரந்தர அடிமைகள்! என்று உலகுக்கு காட்ட, சூடிடத் துடிக்கிறார்கள்--என்பதனை உணர்ந்து, உள்ளம் வெதும்பிக்கொண்டுள்ளனர்.

'இந்திமொழி படித்தால்தான், அகில இந்திய அரசியலில், ஆட்சி இடத்தில், நிர்வாக அலுவலகங்களில், உலாவ, உறவாட, உரிமைபெற முடியும் என்று இங்குள்ள காங்கிரஸ் அமைச்சர்கள் செப்புகின்றனர்.

ஆப்பிரிக்காவிலே ஆணவ அரசு நடாத்தும் வெள்ளையன், கருப்பர் எங்கு நடமாடவேண்டுமென்றாலும், வெள்ளை அரசு தரும், அனுமதிச் சீட்டு வாங்கிக்கொண்டுதான் செல்லவேண்டும் என்கிறான்.

அந்தச் சீட்டு இல்லை என்றால், போலீஸ் பிடிக்கிறது, சிறைக்கு இழுக்கிறது, மறுத்தால் சுடுகிறது.

ஆடவர் மட்டுமல்ல தம்பி! பெண்களும்கூடி, அந்த அனுமதிச் சீட்டுகளை, அடிமை முறிச்சீட்டுகளை கிழித்து எறிந்தனர், கொளுத்தினர்; கொடுமைகளைத் தாங்கிக் கொண்டனர்.

அங்கு வெள்ளை அரசு, கருப்பருக்கு, அனுமதிச் சீட்டுமுறை வைத்திருக்கிறது; இங்கு காங்கிரஸ் ஏகாதிபத்தியம் 'இந்தி' எனும் முத்திரை பொறித்துக் கொண்டால்தான், அகில இந்தியாவில், உலவலாம், உறவாடலாம், வசதி பெறலாம்—பிழைத்துப் போகலாம் என்று கட்டளை பிறப்பித்திருக்கிறது. என்ன செய்யப்போகிறாய்? என்ன செய்யச் சொல்கிறாய்? ஏற்கமாட்டாய், அடிமை முத்திரையை என்பதை நான் அறிவேன்; நாடு அறியவேண்டுமே! அதற்கு என்ன செய்யவேண்டும்?

மிகச் சிலர், மொழிக்காகப் போராடும் துணிவினர்! அவர்கள் போராட்டமும் மிகச்சில நாட்களே நடந்திடும்!—என்று உண்மையாகவே, காங்கிரஸ் எதேச்சாதிகாரிகள் நம்பிக்கொண்டுள்ளனர்.

ஒருவர் இருவர்தான் உளர், என்றாலும் பரவாயில்லை, முயற்சி திருவினையாக்கும், சிறுபொறி பெருநெருப்பாகும், என்ற மொழிகளை, நாடு அறியும்.

நாம், முறை கண்டறிந்து, அறப்போர் துவக்கினால் நாடு அறிந்து, கிளர்ந்து எழும்.

நாள்தோறும் நாம் காணும் மக்கள் கூட்டம், இதை உறுதிப்படுத்துகிறது.

துவக்கிட நாம், என்றால் தொடர்ந்து நடத்திட நாட்டவர், உளர் என்ற நிலை ஏற்படத் தக்கவிதமாக, சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும்.

'ஐயனே! ஒரு துளி தண்ணீர், என்றென்றும் உலர்ந்து போகாதிருக்க, என்ன வழி?" என்று கேட்ட சீடனுக்கு, புத்தர் "அந்த ஒரு துளி தண்ணீர், கடலில் கலந்துவிடவேண்டும்!" என்று சொன்னார்.

தேர்தலிலே, நமக்குக் கிடைத்திடும் வெற்றிகள் எண்ணிக்கையிலே மிகக் குறைவானதாக இருப்பதை மட்டுமே கணக்கெடுத்துப் பார்த்து. காங்கிரஸ் எதேச்சாதிகாரிகள், "இவர்கள் என்ன செய்ய வல்லவர்கள்? சிறு தண்ணீர்த் துளிகள்போல! உலர்ந்து போவர்! ஒடுங்கிப்போவர்! என்று கூறித் துணிவு பெறுகின்றனர்.

எங்ஙனம் ஒரு துளி தண்ணீர், கடலுடன் கலந்துவிட்டால், அது உலர்ந்து போகாதோ, அஃதேபோல, நமது உணர்ச்சி, எழுச்சி, கிளர்ச்சி, மக்களின் உணர்ச்சி வெள்ளத்திலே சென்று கலந்திடும்போது, புத்தர் கூறினதுபோல, உலராதல்லவா?

நமது எண்ணமும் எழுச்சியும், மக்களின் எழுச்சியுடன், கலந்து உறவாடும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

ஒரு துளி தண்ணீர் அல்ல! மக்கள் மனதிலே பொங்கிக்கொண்டிருக்கும், எழுச்சி வெள்ளத்தின், சிறு திவலை, திராவிட முன்னேற்றக் கழகம், என்று அவர்கள் உணரப்போகிறார்கள்—நிச்சயமாக.

அண்ணன்,

அண்ணாதுரை



'அரச'னை நம்பி....!

ஏராளமான பழமொழிகள் நம்முடைய பேச்சில் கலந்து வருகின்றன. படித்தவர் பாமரர் யாவர் பேச்சிலும் பழமொழிகள் இல்லாமல் இரா. கிராமப்புற மக்களின் பேச்சில் சற்று மிகுதியான அளவுக்கு இவை இடம் பெறுவதைக் காணுகின்றோம். கைக்கு அடக்கமான பொருள்போல் சிறிய அமைப்பில் பெரிய பொருள்களை விளக்குவதால் இவை அந்த அளவு செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. ஆனால் பயன்படுத்தும் எல்லாப் பழமொழிகளையும் பொருள் உணர்ந்துபயன்படுத்துகின்றோமா? நாம் கருதும் பொருள் உண்மையான பொருள்தானா என்று தெரிவது இல்லை. பல பழமொழிகள் சிதைந்தும், உருமாறியும், திரிந்தும் வழங்கிவரக் காண்கின்றோம். உண்மையான பொருள் யாது என்று ஆராய்ந்து அறியும்போது வியப்பாக உள்ளது.

"அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்டது போல்" என்பது ஒரு பழமொழி.

இதற்குப் பலரும் கருதும் பொருள் ஒன்று உளது. யாரோ ஒழுக்கம் கெட்ட பெண் ஒருத்தி, மன்னனிடம் தவறான தொடர்பு கொண்டிருந்ததாகவும், அந்தத் தொடர்புக்காக மன்னன் தந்த பொன்னையும் பொருளையும் நம்பி, என்றும் மன்னன் ஆதரவில் வாழ்ந்துவிடலாம்எனச் செருக்கித், தன் கணவனைக் கைவிட்டதாகவும் பின் மன்னன் யாது காரணத்தினாலோ அவளைவெறுத்துத் தொடர்பைத் துண்டித்துக்கொண்டதாகவும், அதன் பின்னர் அவள் தன் கணவனும் இன்றித் துயர்பட்டதாகவும்—இந்தப் பழமொழிக்குப் பொருள் கூறுகின்றனர்.

இந்தக் கதையை எண்ணிப் பார்க்கின்றபோது மனத்தில் வேதனை எழச் செய்யும் பல உண்மைகள் இதிலே அடங்கியுள்ளன. பழமொழிக்கு இதுதான் பொருள் என ஏற்றுக்கொள்ளுவதானால் இந்தக் கதையை நம்பவேண்டும். இந்தக் கதையை நம்புவதாயின் 1. ஒரு பெண், அதிலும் மணமான பின் ஒழுக்கம் கெட்டுத் திரிந்தாள், 2. அவள் கணவன் தடையேதும் சொல்லாமல் இருந்தான் — பின் அவளால் கைவிடப்பட்டான், 3. அறத்தின் காவலனாக இருக்க வேண்டிய மன்னன், அறத்தைத் துறந்து ஆகாத நெறி சென்று பிறன் மனைவி நச்சி அவளிடம் தொடர்புகொண்டு வாழ்ந்தான்,

மரகதச் சுதன்

என்றுள்ள மூன்று பெரிய குறைகள் சமுதாயத்தில் இருந்தன என்பதை ஒப்புக்கொள்ள நேருகின்றது.

குடும்பத்தில் மனைவி ஒழுக்கம் கெட்டவள்; ஒழுக்கம் கெட்ட மனைவிக்கு உடந்தையாக இருப்பவன் கணவன்; குடும்பம் இந்த நிலையில் இருப்பதோடு நாட்டின் காவலனும் நெறிதவறியவன்—என்று இந்தப் பெருங்கேடான நிலையில் ஒரு சமுதாயம் இருந்திருக்கும் என்று எண்ண இடம் இல்லை. அதிலும் நமக்கு இப்படிப்பட்ட 'நாகரிகம்' தெரியாது. ஒழுக்கத்தின் உருவமான குடும்பப பெண்களும், மானம் காத்த ஆடவர்களும், முறைகாத்த மன்னர்களும் நம்முடைய சமுதாயத்தில் வாழ்ந்தனர் என்பதைத் தான் நாம் அறிவோம்.

ஆகையால் இந்த முரண்பாடுகளைக் கொண்டுள்ள கதையை நம்புவதற்கு இல்லை.

இன்னொன்று: 'அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்டதுபோல' என்று கூறும்போது அரசனை நம்பியதுகூடக் குற்றமாகக் கூறப்படவில்லை. அரசன் இருக்கிறான் என்ற மமதையில் 'புருசனைக் கைவிட்டது தவறு' என்பதே மிகுதியாக வலியுறுத்தப்படுகிறது. "அரசன் இருக்கட்டும்; அவனோடு புருசனும் இருக்கட்டும்" என்று அறிவுரை சொல்வதாக இந்தக் கதை அமைந்திருக்கிறது.

இது அறிவுடைமையாகத் தெரியவில்லை. ஒரு சமுதாயம் இப்படிப்பட்ட 'அறிவுரை'யைச் சொல்லுகின்றது என்றால் அந்தச் சமுதாயத்தை என்னவென்று சொல்வது?

எனவே, இந்தப் பழமொழிக்கு இது பொருளாகப் பொருந்தவில்லை.

சிலர், வேறு ஒருவகையான பொருள் சொல்ல நினைக்கலாம்: 'அரசன் காப்பாற்றுவான் என்று நினைத்துப், புருசனை ஒருத்தி நம்பாமல் விட்டாள். தனக்கும் அரசனுக்கும் தொடர்பு இருந்ததால் அல்ல அவள் அப்படி நினைத்தது; குடிமக்களைக் காப்பாற்றும் கடமையுடையவன்; எனவே தன்னையும் காப்பான் எனக் கருதித் தன் புருசனை அலட்சியப்படுத்திவிட்டாள்' என்று கூறுவர்.

ஆனால் இந்த விளக்கத்தை ஏற்றுக்கொள்ளுவதானால், அரசன்

தன் குடிகளுள் ஒருத்தியைக் காப்பாற்றத் தவறிவிட்டான், அதனால் அவள் ஏமாந்தாள் என்று ஆகின்றது. இதுவும் நல்ல விளக்கமாக அமையவில்லை.

ஆகையால் குறைபாடுகள் கொண்டுள்ள இந்த விளக்கங்கள் பொருந்தா என்று விலக்கவேண்டியதாகின்றது. அப்படியானால் இந்தப் பழமொழிக்குப் பொருள் தான் என்ன? காண்போம்.

அரசன்—நம்பி—புருசன்— கைவிடுதல் —இந்த நான்கு சொற்கள்தாம் இந்த வாக்கியத்தில் முக்கியமானவை. இவற்றுள் நம்பி, புருசன் ஆகிய இரண்டும் தெளிவான சொற்கள். பொருளில் மயக்கம் ஒன்றும் இல்லை. கைவிடுதல் என்பது 'கையை விடுதல்' என்ற பொருள் மட்டும் அல்லாமல், விலகுதல் — நீங்குதல் — போன்ற பொருள்களையும் தருகிறது. இந்தப் பொருள்கள் நயமாகவும் பொருத்தமாகவும் உள்ளன. 'அரசன்' என்ற சொல்லுக்கு என்ன பொருள் என்பதைக் காணுவோம்.

"இதற்குப்பேரகராதிதேவையா? இல்லையே! அரசன் என்றால் மன்னன்" என்று உடனே சொல்லிவிடலாம். உண்மைதான் இது. ஆனால் அரசன் என்றால் மன்னன் என்று பொருள்கொள்ளுவதினால் தான் மேலே சொன்ன கதையைக் கட்டவேண்டியதாகிறது. அந்தக் கதையோ பல சங்கடங்களைத் தருகிறது. எனவே 'அரசன் என்பதற்கு வேறு ஏதாவது பொருள் இருக்கிறதா என்று பார்ப்போம்.

அரசமரம், புங்கமரம், ஒதியமரம் என்று பல மரங்கள் இருக்கின்றன. இவற்றை அரசன், புங்கன், ஒதியன் என்று சுருக்கமாகவும் அழைப்பது உண்டு. இதற்குச் சான்று இலக்கியத்திலே போய்த் தேடவேண்டாம். கிராம மக்களின் கொச்சைச் சொற்களிலேயே இந்த வழக்கு இருக்கிறது. இவை மட்டும் அல்லாமல் பல இலக்கியச் சொற்கள் பேச்சுவழக்கில் இருந்து வரக் காணுகின்றோம்.

எனவே "அரசன்" என்பது அரசமரத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். அப்படிக்கொண்டால் "அரசமரத்தை நம்பி புருசனைக் கைவிட்டதுபோல" என்று பொருள் ஆகின்றது.

இது பொருந்துகின்றதா என்று ஆராய வேண்டாமா? ஆம்!

யாரோ ஒருத்தி, அரசமரத்தைச் சுற்றினால் பிள்ளைப்பேறு உண்டாகும் என்று கேள்விப்பட்டாள். உடனே அவள் மனத்திலே 'அரசமரத்தைச் சுற்றினாலே, பிள்ளைப்பேறு கிடைக்கும்போது, புருசன் வேறு வேண்டுமா?' என்ற எண்ணம் தோன்றியிருக்கும். இது இயற்கைதானே! அப்படித் தோன்றினதால், புருசனைக் கைவிட்டு அரசமரத்தையே நம்பினாள். ஆனால் பிறகு தான் எண்ணியது கிடைக்காமல் ஏமாந்தாள். அதைத்தான். 'அரசனை (அரசமரத்தை) நம்பிப் புருசனைக் கைவிட்டது போல்' என்று இந்தப் பழமொழி எச்சரிக்கின்றது.

'அரசமரத்தைச் சுற்றிவந்து அடிவயிற்றைத் தடவிப்பார்த்தது போல' என்ற இந்தப் பழமொழியும் இதுபோன்ற கருத்தைக் கூறுகின்றது. "இது இடைக்காலத்தில் எழுந்த பொய்யான நம்பிக்கை தானே? இதை எப்படி ஏற்றுக் கொள்ளுவது?" என்று சிலர் கருதலாம்.

ஆம், இடைக்காலத்துநம்பிக்கை தான், புருசன் என்ற சொல்லே இடைக்காலத்துச் சொல்தானே! ஆகையால் இந்த நம்பிக்கையும் பழமொழியும் இடைக்காலத்தில் எழுந்தவையே. எனவே அதில் ஐயப்பட ஒன்றும் இல்லை.

கூர்ந்து நோக்கினால் இந்தப் பழமொழியில் வேறு எத்துணையோ சிறப்பான அறிவுரைகளைக் காணலாம்.

புருசன் பிள்ளைப் பேற்றுக்குக் காரணமாக இருக்கவேண்டியவன். பிள்ளைப்பேறு வேண்டுமானால் அவனைத்தான் நம்பவேண்டுமேயன்றி, வேறு யாரையும் — எதையும் நம்புவதினால் பயன் இல்லை. அதிலும் ஒருதொடர்பும் இல்லாத அரசமரத்தை நம்பிப் பயன் இல்லை.

உழைப்பு இருந்தாலே எதுவும் கிடைக்கும். உழைக்காமல் பெறலாம் என்று எண்ணினால் இயலாது. உழைப்பை உதறிவிட்டு வேறு எப்படியாவது ஏதாவது கிடைக்கும் என்று எண்ணினால் ஏமாற்றம்தான்.

அரசனால் (அரசமரத்தால்) பிள்ளைபபேறு கிடைக்கும் என்று நம்புவது—மந்திரத்தால் மாங்காய் விழும் என்று எண்ணுவதுபோல், பிள்ளைப்பேறு வேண்டுமானால் புருசன் வேண்டும் என்பதைப்போல், மாங்காய் வேண்டுமானால் முயற்சி செய்யவேண்டும். இன்றேல் 'அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்ட' கதைதான்!

உழைப்பு—முயற்சி இன்றி எதுவும் நடக்காது என்பதைத்தான் இந்தப் பழமொழி கூறுகின்றது. நம்பி ஏமாறவேண்டாம் என்று எச்சரிக்கை செய்கிறது.

இன்னும் ஒரு ஐயம்: சரி. அரசன் என்பதற்கு அரசமரம் என்ற இந்தச் சாதாரண பொருள் புலப்படாமல் போனதற்கு என்ன காரணம்? பொருள் புலப்படாமல் இந்தத் தவறு ஏற்படவில்லை. மயக்கத்தினால் ஏற்பட்டது. அது என்ன மயக்கம்? இலக்கண மயக்கம்,

புருசன் என்பது உயர்திணை. எனவே 'அரசன்' என்பதும் உயர்திணையாகவே இருக்கவேண்டும் என்று தவறுக்க் கருதியதால் ஏற்பட்ட மயக்கம்.

மயக்கம் மாறினால் தெளிவு பிறக்கும். இந்தப்பொருள் தெளிவாக இருக்கிறதா, சொல்லுங்கள்.

★

வர்ணப் பனிக் கட்டிகள்

அண்டார்க்டிக்கில் லாசரேவ் ஆராய்ச்சி நிலையத்தில் ஓரிரவு ஒரு அதிசயம் நடைபெற்றதை, சோவியத் விஞ்ஞானி என். எம். மாக்ரோவ் கண்டார்.

ஆகாயத்திலிருந்து பொழியும் பனிக்கட்டிகளின் மாதிரிகளைச்சேகரிப்பதற்காக அவர் வெளியே சென்றபோது, விநாடிக்கு 25 மீட்டர் வேகத்தில் புயல் வீசிக்கொண்டிருந்தது.

தரையில் விழுந்த பனிக்கட்டிகள் தட்டு வடிவிலும், நீண்ட ஊசி, உருளைகள், கம்புகள் ஆகியவற்றின் வடிவிலும் இருந்தன. ஆனால் எல்லாப் பனிக்கட்டிகளின் நிறமும் வெண்மையாக இல்லாததைக் கண்டு அவர் பெரும் ஆச்சரியம் அடைந்தார். தரையில் விழுந்த மூன்று பனிக் கட்டிகளில் ஒன்று சென்னிறப் பனியாக இருந்தது!

இந்த விசித்திரமும் அண்டார்க்டிகா பற்றிய இதர புதிர்களும் இன்னமும் துப்புத் துலக்கப்படாமலேயே உள்ளன.

4-ம் பக்கத் தொடர்ச்சி

செங்:- அத்துமீறிப் பிரவேசித்து விட்டதாகவும், அதனால் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்றும் கோரினர். மன்னிப்பா... அது தமிழ் மண்ணுக்கே இல்லாத மகிமை என்றேன். வா போருக்கு என்றனர். போடு இரும் சாப்பாடு என்றால் வேண்டாமென்று விட்டு விடுவேன். போர் நடந்தது—போரா அது—புல்லர்கள்—அற்பர்கள்-வீரத்தின் வித்துக்கூட அவர்களிடத்திலே இல்லை. வாளை வீணே உருவச்செய்துவிட்டனர் வில்லவனுக்குக்கூட வேலையேயில்லை.

வில்:- ஆம் தாயே! இளவரசரின் வாள் வீச்சுக்கே அவர்களால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஆயிரம் பேர் இருப்பர்; அனைவர்க்கும் தான் ஒருவனாக நின்றார். ஓடு—ஓடு என்று புறமுதுகிட்டு ஓடிவிட்டனர்.

[அது சமயம் அங்கு வந்த ஆரியத் தூதுவன் ஒருவன் பணிந்து ஓலையை நீட்டுகிறான்]

செங்:- (ஓலையைப் பார்த்தபடி) வில்லவா.........ஆரிய மன்னர்களில் நூற்றுவர் கன்னர் என்ற குழுவினர் சமாதானம் நாடி தூதுவிடுத்திருக்கின்றனர். நடந்த செயலுக்கு மன்னிப்பும் கோரியிருக்கின்றனர்.

வில்:- இவ்வளவு விரைவில் இப்படி ஆவார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை இளவரசே!

செங்:- இருந்தாலும் மற்றவர்களை விடக்கூடாது. நான் முன்பே கூறியபடி அவர்கள் பாடி வீடு நோக்கிப் படைகள் புறப்படட்டும்.

நற்:- செங்குட்டுவா ....வேண்டாம்......படை புறப்பட வேண்டாம். நாம் வந்ததோ நீராட... புண்ணியம் தேட.........இந்த வேளையில் இரத்தக்களறி எதற்கு? அவர்களும் உன்னிடம் தோற்று வேறு ஓடிவிட்டனர். இன்னிலையில்.................

வில்:- அதுமட்டுமில்லை இளவரசே.........! இது அவர்கள் இடம்—நாமோ போதிய படை கொண்டு வரவில்லை முறையாகப் போராட. சிறிய பாது காப்பு அணிமட்டும்தான் உள்ளது.........

செங்:- இருவர் சொல்வதும் உண்மைதான். சிந்தித்துப் பார்க்கவேண்டியதாகத்தான் உள்ளது.

தூதுவன்:- கங்கையில் விழாக் காண வந்திருந்த மற்றைய மன்னர்கள் அப்பொழுதே கடை கட்டிவிட்டனர் தங்கள் தங்கள் தேசத்திற்கு. கரையிலே உள்ள அரசு எங்கள் நூற்றுவர்கன்னர்களுடையது மட்டும்தான்.

செங்:- அப்படியா........... அவர்களும்தான் சமாதானம் வேண்டுகின்றனர்.

[நூற்றுவர்கன்னர் வெண்கொடி பிடித்து வருகின்றனர்]

தூது:- அதோ......எங்கள் மன்னர்கள் தங்களின் நட்பை நாடி வருகின்றனர்.

செங்:- சரி, கூடாரத்திற்கு வரச்சொல்.

[தூதுவன் போகிறான்]

செங்:- ஆனால், வில்லவா......என் உள்ளம் ஏனோ அமைதியுற மறுக்கிறது. எனினும் தற்போதைய நிலைக்குப் போரும் சரியில்லை. இருந்தாலும் என்றாவது ஒருநாள்...........என் வாழ்நாளில்......நிச்சயம் இந்த நீசர்களைப் போர் முகத்தில் சந்திப்பேன். பூசுரர் கூட்டத்தைப் புகைப் புகையாக்குவேன். சேரர் பரம்பரையின் வீரத்திற்கு இவர்களின் விலாவெலும்புகளை விலை பேசுவேன். தென்னகத்தின் தீரத்தை கன்னர் அறியச் செய்வேன். அதுவரையில் இந்த வெஞ்சினம் என் நெஞ்சுக்குள்ளே நீண்டுகொண்டிருக்கும்.

வில்:- எனக்கும் அப்படித்தான் இளவலே! சந்தர்ப்பம் வரும் பொழுது சரியாகப் புடைத்து விடுவோம்.

செங்:- புடைப்பது மட்டுமா......... களம்......இப்பொழுது ஒன்றும் உரைக்கக்கூடாது. புறப்படுங்கள்.........நீராடி வாருங்கள்... போவோம்.

காட்சி 7

இடம்:- அரண்மனையில் அந்தப்புறம்.

இருப்போர்:- சேரன் செங்குட்டுவன், வேண்மாள்.

செங்:- அன்று நடந்தது இது தான் வேண்மாள். இன்று கிடைத்திருக்கிறது அதற்கான வாய்ப்பு. இமயத்தாபதர்கள் என்ற துறவியர் எனக்குக் கூறிய 'தென் தமிழ் நாடு ஆளும் வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து மின் தவழும் இமய நெற்றியில் விளங்குவின்ற வில் கயல் பொறித்த எம் போலும் முடிமன்னர் ஈங்கில்லைப் போலும்' என்ற பழிமொழி என் போன்றோர் செவியில் விழுந்த பின்னும் அது யாருக்கோ, எந்த ஊருக்கோ என்று அடங்கிக் கிடப்பவன் ஆமை, உறங்கிக் கிடப்பவன் உலுத்தன், முடங்கிக் கிடப்பவன், மூடன், மற்றவரும் போற்றும் தமிழ் மானத்திற்கே மாசுதேடும் ஈனன்.

[அதுபோது போர் முரசு கேட்கிறது]

ஆ ஆ.........வேண்மாள் முரசு முழங்குகிறது......போர் முரசு. போர்க்கருவிகளைப் புறவீடு விடும் நேரம் நெருங்கிவிட்டது. இற்றைக்கு நாலாம் நாள் நம் படை வடக்கு நோக்கிச் செல்லும். அந்தக் கயவர்களைக் களத்திலே கொன்று குவித்து ......பகை மிதித்து......வாகை பிடித்து......எம் கோமகள், கற்பின் திருவுருவாய், கண்ணீர்த் துளிகளின் சக்தியை மதுரைக் காவலனுக்குக்காட்டிய காரிகையாம் கண்ணகிக்குச் சிலைவடிக்கச் சித்திரக்கல்லை இமயத்திலிருந்து எடுத்து, நாவின் நர்த்தனத்தாலே நலிய இருக்கும் நீசர்களின் முடி நெரித்து நாவலந் தீவினர்களின் தீரத்தை, தென்னகத்தின் ஆற்றலை அந்த ஆரிய அரசர்கள் மட்டுமல்ல, அகிலமும் அறியச்செய்து மானமறவன் சேரன்செங்குட்டுவன் என்பதை மன்பதைக்குக் காட்ட மகத்தான சந்தர்ப்பம், புறப்படு வேண்மாள்......புறப்படு.........புறவீட்டு விழாவிலே கலந்துகொள்ள விரைந்து புறப்படு. ●

இனித்த வேம்பும் உவர் நீரும்!

மண்வளம்மிக்க மருதநிலம்; கனிமரச் சோலைகளும், பனிபடர் பசும் புற்றரைகளும், தேன்படு மாவும் வான்படு வண்ண மரங்களும் அடர்ந்த தரை. பசிய வயல்களும், நீர் பாயும் வாய்க்கால்களும் கண்ணைக் கவரும் காட்சி அந்நிலத்திற்கு உரியது. அங்கே ஒருசோலை; அள்ளிவரும் தென்றல் அலைபாயத் தண்புனல் துள்ளிவரும் ஆற்றின் கரையோரத்தது. அங்கே தண்டலை மயில்கள் ஆடின; தாமரை விளக்கந்தாங்கின; தென்றலந் தேர்கள் ஓடின; கொண்டல்கள் முழவின் ஏங்கின; யாழினிமை வண்டுகள் பாடின; வரிக்குயில்கள் இசைகூட்டின; மாலைநேரம்; ஞாயிற்றின் மங்கிய தங்கக்கதிர்கள் சோலையைப் பொன்மயமாக்கின. இன்பக் காட்சிகளால் இதயம் விம்ம, அவ்விருவரும் இயற்கையின் அழகைத் தங்குதடையின்றி அள்ளி உண்டனர்; ஆவி ஒன்றினர்; ஒரு மரத்தடியில் அமர்ந்தனர். மாவலிமிக்க மலைத்தோளும், படர்ந்த மார்பும், செங்கதிரொளி பொங்கியெழும் நெற்றியும் உடைய வெற்றிவீரன் அவன். அவளோ; கண்டார் மயங்கும் கட்டழகுக் கன்னி; நெற்றிப் பொட்டழகு ஒளிவீசும் நேர்த்தியுடையாள்; கன்னக் கதுப்பழகும், புன்னைச் சிரிப்பழகும், போதை தரும் மாநிறமுடைய சின்னஞ்சிறுசிட்டு. வதனமோ பொன்னொளித் தட்டு; கிளிமொழியினள்; குயிலிசையினள்; நிலாவொளி நுதல்; நெடுவில் புருவம்; குவளைக்கண்கள்; பவளச்செவ்வாய்; தவளமணிக் கழுத்து; இவையுடைய தளிர்க் கொடியாள், அவ்வீரனின் எழிற் காதலி! சிங்கத்தை நிகர்த்தவன்; எனினும் இத்தங்கத்தின் ஆணைக்குத் தலைசாய்த்தான்; களத்தில் வீரன்; இவள் உளத்தின் அடிமை! தண்ணெனத் தென்றல் வீசியது; கண்ணெனத்தகும் அக்கன்னியின் வண்ண முகத்தை நோக்கினான், பின் கொத்தான மலர்க்குலம் தாங்கிய கார் கூந்தலைக் கோதினான்; விழிக்கொண்டையின் நோக்கும். சிலம்பின் ஒலியும், கிளியின் குரலும் அவனைப் போதையில் ஆழ்த்தி இன்பபுரிக்குப் பாதை வகுத்தன. "காதலியின் கண் பார்வையிலே வேம்புங்கரும்பாகும்; நஞ்சும் பஞ்சாமிர்தமாகும்; உப்பும் இனிக்கும்; உவர்நீரும் தித்திக்கும்!" என்ற விதிக்கு விலக்கானவனா அவன்? "கண்ணின் கடைப் பார்வை காட்டுக; கல்லும் மண்ணாகும்; காடும் மேடும் கழனியாகும்;

கோ. தமிழ்ச்செல்வன்

மண்ணில் எம்மனோர்க்கு மாமலையும் சிறு கடுகு; வானத்திலும் என் வல்லமையைக் காட்டுவேன்; திங்கள் மண்டலத்தையும், திக்கங்குகள் கக்கும் வெங்கதிர் மண்டலத்தையும் வெல்வேன்; விண் மீன்களைப் பெயர்த்தெடுத்துவந்து உன்முன் விளையாட்டுப் பொருள்களாய் வைப்பேன்; கடலின் ஆழத்திற்குக் கலங்கேன்; நிலவுலகத்தின் எல்லைகள் எனக்குத் தூசு; கடும்புயலையும் கார்காலப் பனியையும் பொருட்படுத்தேன்......" என்று கூறாமல் கூறிக்கொண்டிருந்தது அவன் மனம். இளங்காதலரின் சந்திப்புக்குத் தடையின்றி இடந்தந்தது அச்சோலை. ஆற்றோட்டமும், தென்றற் காற்றோட்டமும் அவர்தம் காதற்பண்ணுக்குச் சுதி கூட்டின. களவு முறையில் பலநாள் பழகினர்; உளவு அறிந்து ஊர் அலர் தூற்ற; உடன் அதை மாற்ற; பெற்றோரும், பெரியோரும், உற்றாரும், உறவினரும் வாழ்த்துக்கூற, திருமணத்தில், ஒரு மனமாய், ஈருடலாய் உடன்பட்டு, மணம்பெற்று வாழ்ந்தனர்.

சேலோடும் தடாகத்தில், அன்பு மேலூறும் சிந்தையுடன் புனலாடி மகிழ்ந்தும், புத்தின்பம் கண்டும், உளம் மகிழ, ஊர்போற்ற, உவகைத் தேன் நாளும் உண்டு வாழ்ந்தனர். அந்நிலையில் ஒரு நாள்...

இல்லத்தின் பின்புறத்துத் தோட்டத்தில் உள்ள வேப்பமரத்தின் அடியிலுள்ள கல்மேடையொன்றில் அமர்ந்திருந்தனர் இருவரும். ஏதேதோ பேசினர், வேம்பின் பூக்கள் இடையிடையே இருவர்மேலும் விழுந்தன. உதிர்ந்த பூக்களின் மெல்லிய மணம் தண்ணெனக் கமழ்ந்தது; இடையே, குறும்பொன்று செய்யநினைத்தாள் அக்கரும்பு மொழியாள். மரத்திலிருந்து விழுந்த வேப்பங்காய் ஒன்றை எடுத்து அவன் கையிலே கொடுத்தாள்; காதலி தந்தால் கடுவிடத்தையும் கனிரசமெனக் கருதும் காளை, அதனை உடனே தின்றான். "சுவையாயிருக்கிறதல்லவா?" என்றாள். "ஆகா, தேன் போலிருக்கிறது" என்றான். சித்திரப்பாவை சிரித்தாள்—அவனுக்குக் கசப்புச்சுவை தென்பட்டது. பின்னர்தான் உணர்ந்தான், தான் வெகு கெட்டித்தனமாக ஏமாற்றப் பட்டுவிட்டதை! கனிமொழியாள் தரும் கசந்தகாயும் தித்திக்கிறது என்று சொல்லித் தின்ற அவன் செயலை அம்மங்கையின் தோழியும் மறைந்திருந்துபார்த்தாள்போலும்!

ஆண்டுகள் சில சென்றபின், அந் நிகழ்ச்சி, அவனுக்கு அறிவுரை கூறப் பயன்படும் என்று கண்டாளா அவள், அப்போது?

காதலெனும் பிணைப்பில் கட்டுண்டு கிடந்தவனின் போக்கு நாளாக நாளாக மாறியது. வேறொரு நங்கையைக் கண்டான் —நெஞ்சம் மாறுபடத் தன் மனைவியைப் பிரிந்தான். அன்றொரு நாள் ஆற்றுவெள்ளத்தில் புனலாடச் சென்ற ஒரு பூவையைப் புதுவெள்ளத்தினின்றும் காப்பாற்றினான். அதுமுதல் அந்தமங்கையின் செங்கண்கள் அவன் மனத்தைச்சுற்றி வட்டமிடலாயின. புதுமங்கையின் சேர்க்கையில் மதுநிகர் இன்பம் மாந்தியிருந்தான்; வீட்டிலிருக்கும் மனைவியை மறந்தான்; இல்லத்தில் மனைவியோ கணவன் பிரிவால் ஏங்கியிருந்தாள்; கண் பனிநீர்மல்க, கைவளைகள் சுழல, வாள் நெற்றி ஒளியிழப்ப, தோள்வளைகள் நெகிழ உடல்மெலிந்து, உணர்விழந்து, உயிர் இழந்த பதுமைபோல், ஒளியிழந்து மாசுண்ட ஓவியம்போல், வழியிழந்து தவிக்கின்ற மரக்கலம் போல், நீர்ச்சுளிபட்டுத் தத்தளிக்கும் சிறுமீன்போல்; சூறுவளிப் பட்ட சோலைமரம்போல் வாடி நலிந்து வருந்தினாள். தண்ணொளி பட்டெரிக்கும் வட்டநிலா அவளுக்கோ வெண்ணொளி வெயில் சுட்டெரிக்கும் கதிரவனாய்த் தோன்றியது. வண்ணமதியின் தண்ணங் கதிர்கள் நெருப்பாற்றின் அலைகள் போல அவளைத் தாக்கின. கூவுகின்ற குயிலின் குரல், முல்லைச் செடிகளைத் தாவுகின்ற மானின் கூட்டம், இணைபிரியாது அணைந்திருக்கும் அன்றிற் பறவைகள், பிணைபிரியாதிருக்கின்ற கலைமான்கள் ஆகிய இவை யாவும் துயரத்தீயைத் தூண்டி எழுப்பின. இரவு, உறவுகொண்ட கணவனின் பிரிவு குறித்து அரவெனத் தீண்டியது அவளை! வானத்துத் தாரகைகள் கண்சிமிட்டித் தேனொத்த அவளின் முந்திய வாழ்வை எடுத்துக் கூறின. கானத்துப் பறவைகளின் பாட்டோசை கேட்கமுடியாத திட்டோசையாயிற்று—தீக்கனல் செவியில் ஏற்றிற்று. வண்டுகள் மலர்ச் செண்டுகளில் இருக்கும் தேனை மொண்டு வாயினிமையுற உண்டு, எஞ்சியதைக் கொண்டுசெல்கின்ற காட்சிகண்டு, பண்டைய நினைவுகளை எண்ணி வருந்தினாள்.

அவனோ, புதியவளின் வேல் விழியில் சிக்கி, பால்மொழியில் அடிமையாகி, உற்றுளை மறந்து, ஊர்சொல்லும் பழியையும் பொருட்படுத்தாது, அவளின் காந்தக் கண்கள் தரும் கவர்ச்சியிலே, கயல் விழியின் உருட்டலிலே, மருட்சியுற்று, கட்டுடலின் அணைப்பில் கட்டுண்டு, காலம் நேரம் மறந்து, கனவுபலகண்டு, நாட்களைக் கடத்திக்கொண்டிருந்தான். தனக்குச் சொந்தமானவள் பிரிவால் இல்லத்தில் வெந்தணலிற் புழுவென வெந்து, நொந்து கிடக்கும் நிலையைச் சிந்தையில்கொள்ளானாய், சந்தன மிடற்றழகுச் சப்தங்கள் எழுப்புகிற கந்தர்வக் கானத்தினில் தன்னை மறந்திருந்தான். அவளோ அருமைமிகு கணவன் தன் குடிப் பெருமைதனை மறந்து சிறுமைவழி சென்றிடினும், பொறுமைமிகு மனங்கொண்டு துயராற்றிப் பொறுத்திருந்தாள். எனினும் உள்ளம் உடைந்து, உடல் தேய்ந்தது. பளிங்குக் கன்னத்தின் விளிம்பிலே அழகு மாய்ந்தது. வண்டு விழிகளில் வாட்டம் நிறைந்தது; மாந்தளிர் நிறமோ மறையலாயிற்று.

ஊர் அலர் பேசியதால், உணர்வு கலங்கிற்று, அவனும் ஒவ்வொரு சமயம் இல்லத்திற்கு வந்து போனான். ஆயினும் பழைய அன்புச் சொற்கள் மாறின. செந்தமிழ்ப் பாவையின் சிரித்த பேச்சுக்கும் சீறினான். அன்பு குறைந்ததனால், அவள் செய்தவையாவும் குற்றமெனக் கூறினான். பனிச்சுனைத் தண்ணீர் பருக அவள் தரினும், உவர்நீர் எனக்கூறி உதறித் தள்ளினான். கணவன் அன்பில் மாற்றங் கண்ட காரிகை கலங்கினாள், எவ்வகையில் தன் வாழ்வு தழைக்கும் என மயங்கினாள்; விடியாதா தன் வாழ்க்கையிருட்டு? படியாதா கணவனின் அன்புமனம் தன்பால்? என அப்பொற்கொடியாளின்மனத்தினிலே எண்ண அலைகள் பொன்னென மின்னியவண்ணமிருந்தன. பல நாட்கள் பொறுத்திருந்தாள். இறுதியில் அவள் எதிர்பார்த்திருந்த இன்பநாள் வந்தது. அவன் தன் தவறுணர்ந்து இல்லம் ஏகினான் ஒருநாள். ஆம். அன்றொருநாள், புனலோட்டத்தில் கண்ட புதுமங்கையின் பாலிருந்த போதை தெளிந்து பொன்னனைய தன் மனைவியைக்காண ஓடோடி வந்தான். நிலாவைப் பழிக்கும் அவள் நெற்றி ஒளி மங்கியதையும், பலாவைப் பழிக்கும் இன்சொல் மறைந்ததையும் மீண்டும் காண ஆசை தூண்ட மீண்டனன். கற்பும் பொற்பும் வாய்ந்த காரிகையைக் கைவிட்டு அற்பபாவையரை நச்சியிருந்ததினை நாணந்தந்தது. இல்லத்தின் உள்ளே செல்ல வாசல் நண்ணினான். பூட்டிய கதவை மெல்லத்தட்டினான், கேட்டது இவ்வொலி தோழிக்கு! எழுந்து, கடைதிறந்து, வெளி வந்து அவனைக்கண்டு எங்கு வந்தீர் என்று கேட்டாள். அவன் நாணத்தால் ஒன்றும் பேசாதிருந்தான். பின், "அவள் மிக வருந்தும்படி யான் நடந்துவிட்டேனோ?" என்று மெல்ல வினவினான். கேள்வியைக்கண்டு மனத்தில் நகைத்து அவனை நோக்கிப் பேசத்துவங்கினாள்.

"அவள்மீது மிகுந்த அன்புடையராய் இங்கு வந்தீர்போலும் ...."

"ஆமாம். நடந்ததை மறந்துவிட்டு......"

"மறப்பதா? எளிதாகச் சொல்லிவிட்டீரே. உம்மீது பெருங்காதல் பூண்ட நங்கை அவள்..."

"நானும்தான்...அவள்மீது...... பேரன்பு கொண்டவன்..."

"ஆமாம். முன்பெல்லாம்—மணமான புதிதில் அப்படித்தான்..."

"இப்போதும் அப்படியே. என் அன்பில் என்னகுறை கண்டீர்கள்?"

"குறைபாடு ஒன்றிரண்டா எளிதில் கூறுவதற்கு? முன்பெல்லாம் அவள்மீது எத்துணைப் பேரன்பு கொண்டு பழகி வந்தீர்? மணமான புதிதில், அன்றொரு நாள், தோட்டத்து வேம்பின் அடியில், என் தோழி, கசந்த வேம்பின் பைங்காயை உம்மிடம் தர, அதனை வாங்கித் தின்று 'தேம்பூங்கட்டி' எனக்கூறி மகிழ்ந்தவர்தானே நீர்? இன்றோ, என் தோழி பாரியின் பறம்புமலைக் கண் தோன்றிய பனிச்சுனை நீரினும் குளிர்ந்த நீர் தரினும், அது வெப்பம் மிகுந்து உவர்க்கிறது என்று கூறுகிறீர். என்னே உம் காதலின் மாட்சி! என்னே நுமது அன்பின் வளர்ச்சி!"—இவ்வாறெல்லாம் ஏளனமாகக் கூறி இடித்துரைத்தாள். வெட்டியிடிக்கும் மின்னலையும், கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது, கட்டிக் கரும்

பணியாளைச் சந்திக்க, அட்டியின்றி நாடோறும் சோலை சென்ற அந்த நாட்களை நினைவுபடுத்தினாள். அவன் மனம் மாறிற்று. அவன் மேற்கொண்டு பேச முடியாது திகைத்து, என்மீது தவறு உண்டு. உள்ளே செல்ல அனுமதி தருக. நின் தோழியின் துயர் நீக்குவேன். இனிப்பிரியேன்; அவள் வருந்தும்படி கனவிலும் நடவேன்...'' என்று குழறிக் கொண்டே கூறி முடித்தான். பின்னர் தோழி அனுமதி தந்தாளோ, இல்லையோ; ஆனால் புலவர் மிளைக்கந்தன் என்பார் அன்பு குறைந்த தன்மையை இவ்வாறு தோழி எடுத்துக்கூறித் தலைவனைத் திருத்தும் பான்மையில் அழகியதொரு பாடலில் அமைத்துள்ளார், நற்றிணைக்கு அடுத்த நல்ல குறுந்தொகையில்! அது இது:—

வேம்பின் பைங்காய் என் தோழி தரினே
தேம்பூங்கட்டி என்றனிர் இனியே
பாரி பறம்பிற் பனிச் சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கட் டண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய, அற்றால் அன்பின் பாலே.

(குறுந்தொகை, 196—வாயில் வேண்டிப் புக்க கிழவற்குத் தோழி கூறியது.)

வேம்பின் காய் கசப்புமிக்கது. அதிலும் பைங்காய்; முற்றிய பச்சைக்காய். அதனைத் தந்தாள் அவள், அவனுக்கு! விளையாட்டாகத்தான் தந்தாள். "ஆகா, தேனின் பாகுபோல் தித்திக்கிறது'' என்று பாராட்டினான். அவளுக்குச் சிரிப்பு வந்தது. இக்காட்சியைத் தோழி கண்டிருந்தாள் அன்று. அவர்தம் அன்பை நினைத்து வியந்தாள்—மகிழ்ந்தாள். பின்னர் ஏற்பட்ட அன்பின்மையையும் உணர்ந்தாள். பறம்புமலையில் குளிர்ந்த நீர்ச்சுனைகள் பல உண்டு. இளநீரையும் வெல்லும் சுவையுடைய நீர். தைத்திங்கள் கடும்பனி கொட்டும் காலம்; சுனைநீர் பனி மிகுதியால் குளிர் நீராகும். "அப்படிப்பட்ட சுனைநீரை எம் தோழி இப்போது உமக்குத் தந்தாலும் வெது வெதுப்புடன் உவர்க்கிறது என்று சொல்லுகிறீர், அன்று வேம்பின் பைங்காயைத் தேம்பூங்கட்டி என்றீர்.'' இவ்வாறெல்லாம் கடிந்துரைக்கிறாள் தோழி. அவனது அன்பு கெட்ட நிலையை, இரு எடுத்துக்காட்டுகள் தந்து விளக்கி அவனைத் திருத்துகிறாள்.

குறுந்தொகை என்ற அருந்தமிழ் இலக்கியத்தில் உள்ள ஆறு வரிபபாடல்தான் இது. ஆறே வரிகள் — அதற்குள் இத்தனை காட்சிகள்! தலைவனைத் திருத்தத் தோழி கூறும் சொற்களின் நயம் எத்துணை பண்போடு அமைக்கப்பட்டிருக்கிறது? இத்தனை அழகான பாடலை நாம் இலக்கியமாகப் பெற்றிருக்கிறோம்—அதுவும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு—என்னும்போது நம்மொழியின்பால்—நாட்டின்பால் எத்துணைப் பற்றுண்டாகிறது! அப்பற்று ஒன்றுதான் நம் திருவிடத்தை விடுவிக்கப் போகும் படைக்கருவி! அக்கருவி எல்லோருக்கும் வாய்க்கவேண்டும், அப்போது, திருவிடம் இழந்த நல்லுரிமையை எய்தப்பெறும்!

★

உழைப்பும், படிப்பும்

சோவியத் பெண்கள் ஏழாண்டு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னணியிலிருந்து வேலை செய்கிறார்கள். உழைப்பின் உற்பத்தி சக்தியை உயர்த்துவதற்கும், நவநவீன இயந்திர சாதனங்களை உபயோகித்துக் கொள்வதற்கும் ஆர்வமுடன் பாடுபடுகிறார்கள், வேலை நேரம்போக ஓய்வு நேரத்தை கல்வி கற்பதில் செலவிடுகிறார்கள். இம் மாதிரியான அறிவுத்தாகம் எல்லா சோவியத் பெண்களிடமும் காணக்கூடிய பொதுவான இயல்பாகும்.

நிறுவன ஆற்றல் மிக்க பெண்கள் தங்கு தடையின்றி தலைமையான பதவிகளுக்கு உயர்த்தப்படுகிறார்கள். 13,000க்கு மேற்பட்ட சோவியத் பெண்கள் தொழில் நிலயங்களில் இயக்குனர்கள் தலைமை எஞ்சினியர்கள் போன்ற முக்கிய பதவிகளில் பணியாற்றுகிறார்கள். நாட்டிலுள்ள எஞ்சினியர்களிலும் தொழில் நுட்ப நிபுணர்களிலும் 35 சதவிகிதத்தினர் பெண்கள்.

கூட்டுப்பண்ணை உழைப்பிலே விவசாயப் பெண்கள் நேரடியாகப் பங்குகொண்டு பொருளாதார சுயேச்சை நிலையும், ஆண்களுக்கு சரிநிகரான அந்தஸ்தும் பெற்றுள்ளனர். சோவியத் பெண்கள் பலர் இன்று விவசாய விஞ்ஞானிகளாகவும், கால் நடை நிபுணர்களாகவும், ஆசிரியைகளாகவும், எஞ்சினியர்களாகவும் இருப்பதைக் காணலாம். உயர்நிலைக் கல்வி அல்லது மேற்கல்வி பெற்ற விவசாய நிபுணர்களில் 40 சதவிகித்தினர் பெண்களாவர்.

●

இலட்சக்கணக்கான பெண்கள் அரசாங்க அதிகார நிறுவனங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் உறுப்பினர்களில் 366 பேர் (அதாவது 27.சதவீகிதமானவர்) பெண்கள். சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்திலும், சுயாட்சிக் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துகளிலும் உள்ள உறுப்பினர்களில் 32-சதவிகிதத்தினர் பெண்களாவர். உழைப்பாளி மக்களின் பிரதிநிதிகளாலான சோவியத் சபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோரில் பெண்கள் 38-சதவிகிதமாவர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் பெண்களில் தொழிலாளர்கள், விவசாயிகள், பள்ளி ஆசிரியைகள், டாக்டர்கள், விஞ்ஞானிகள் ஆகிய பலதரப்பட்ட தொழில் துறையினரையும், பல்வேறு இனத்தவரையும், பலவயதினரையும் காணலாம். இவர்கள் எல்லோருக்கும்பொதுவான அம்சம் யாதெனில், இவர்கள் யாவருமே தன்னலமற்ற உழைப்பின்மூலம் மக்களது நம்பிக்கையைப் பெற்றிருக்கிறார்கள் என்பதே.

★

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.